RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சமூக உணர்வுப் பெட்டகம் இராஜம் கிருஷ்ணன்

**வெ. ஆனந்தி [அ, *], ப. விமலா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி- 600032, தமிழ்நாடு, இந்தியா.

# Rajam Krishnan - A Repository of Social Sensibility

**V. Ananthi [a, *], P. Vimala [a]**

[a] Tamil & Research Department, Chellamal Women's College, Guindy – 600032, Tamil Nadu, India

* Corresponding Author: v.ananthi875450@gmail.com

Received: 19-11-2025
Revised: 21-02-2026
Accepted: 07-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is a unique figure who has carved a special place for herself in the world of Tamil literature. She dedicated herself entirely to social concerns, without accumulating anything for herself. Her works reflect themes of equality, the elimination of social inequalities, and workers' rights. This article examines how all of her works serve as a treasure trove of social consciousness.

**Keywords:** Rajam Krishnan, Social Consciousness, Social Thought

## முன்னுரை

சமூகத்தின் பல தளங்களையும், அறங்களையும் பேசக்கூடியது படைப்பு. இராஜம் கிருஷ்ணன் கட்டுரை, புதினம், மொழி பெயர்ப்பு என பலவகைமைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். என்றாலும், புதினத்தின் வாயிலாகக் கவனம் பெற்றவர். இடதுசாரி சிந்தனைக் கொண்ட இவர், தொழிலாளர் வர்க்கப் பெண்களோடு இணைந்து பயணம் செய்த கலகக் குரலாகவும் திகழ்ந்தவர். இராஜம் கிருஷ்ணனின் அனைத்து படைப்புகளும் சமூகத்தின் உணர்வுப் பெட்டகமாக அமைந்துள்ளதா என்பதை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமூக நிலை பற்றிய பதிவுகள்

1948-இல் ‘சுதந்திர ஜோதி’ என்ற நாவலில் தொடங்கி தனது இறுதி நாவலான ‘உத்தரகாண்டம்’ வரை மக்களின் வாழ்வியலினை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார். அதனை மணிக்கொடி எழுத்தாளரும் சிறந்த திறனாய்வாளருமான ‘சிட்டி’ பெ.கோ.சுந்தரராஜன் "நாவல் துறையில் அவர் பெற்றிருக்கும் புகழ் தான் முக்கியமானது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இராஜம் கிருஷ்ணன் வெவ்வேறு ஊர்களுக்குச் செல்வதும் அங்குள்ளவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து நாவல்களாக எழுதுவதும் வழக்கம். இவர் 1970-ல் எழுதிய ‘கரிப்பு மணிகள்’ என்னும் நாவல் உப்புகாய்ச்சும் மக்களின் வாழ்கையினையும், ஆண்-பெண் இருவருக்கும் சம ஊதியம் வேண்டும் என்று கேட்கும் உரிமையினையும் வேறுபாடில்லாத பாதையில் நகர்த்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இவரின் "குறிஞ்சித்தேன்" நாவல் நீலகிரி மலைவாழ் படுகர்களின் வாழ்க்கை பற்றியது. அணைக்கட்டுகள் உருவாகும் போது மக்கள் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களையும், நவீன வாழ்க்கை முறை தந்த நெருக்கடிகளால் தேயிலை பயிர் செய்தலும், அது அவர்களின் வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் நுட்டமான முறையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

தனது ‘முள்ளும் மலர்ந்தது’ என்ற நூலில் சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையரைப் பற்றியும், அவர்களின் வாழ்வியலையும் தெளிவான முறையில் எடுத்துரைத்துள்ளார்.

கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்ட ராஜம் கிருஷ்ணன் மணலூர் மணியம்மாவின் பொதுவுடைமைச் சிந்தனையினையும், அவர் சிலம்பம் பயின்று வேட்டி சட்டையோடு வாழ்ந்ததினையும் "பாதையில் பதிந்த அடிகள்" நாவல் வழியாக எடுத்துக் காட்டுகின்றார்.

'சேற்றில் மனிதர்கள்' என்ற படைப்பின் மூலம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் உள்ள சவால்களைப் பதிவு செய்துள்ளார்.

அடித்தட்டு விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையையும் அவலநிலைகளையும் 'வேருக்கு நீர்' (சாகித்ய அகாடமி) என்ற நாவலில் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

"கூட்டுக் குஞ்சுகள்" புதினம் மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் பலியாகும் அவலத்தினை வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தில் நிலவிய அனைத்து வகையான உணர்வுகளையும் திரையிட்டுக் காட்டியது போல் தனது படைப்புகளில் வெளி காட்டுகின்றார்.

## பெண்ணியப் பார்வை

இராஜம் கிருஷ்ணன் பெண்களின் விடுதலை, சமூக விடுதலை பற்றிய சிந்தனையினை தொடர்ச்சியான ஆய்வுகளையும், நாவல்களையும், சிறுகதைகளையும் கொண்டு முன்வைக்கின்றார். இவரின் 'காலம் தோறும் பெண்' என்னும் கட்டுரைத் தொகுப்பில் சமூக நிலையில் பெண்கள் கீழே சென்ற சித்திரத்தையும், 'காலம் தோறும் பெண்மை' என்ற தொகுப்பில் பெண்மை பற்றிய கருத்துருவங்கள் உருவான முறையையும், 'யாதுமாகி நின்றாய்' தொகுப்பில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களின் வாழ்க்கையையும் ஆராய்ந்து காட்டியுள்ளார்.

தனது 'களம்', 'கைபிடித்தே காதலாருவனை' போன்ற சிறுகதைகளைப் பெண் கதாப்பாத்திரங்களை மையமாகக் கொண்டே எழுதியுள்ளார்.

பெண்ணின் மன அழுத்தத்தை வெளிப்படுத்தும் விதமாகப் 'பெண் குரல்' என்ற நாவலினைப் படைத்து தமிழகப் பெண்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் ராஜம் கிருஷ்ணன். பெண்சிசுக் கொலைக்கு காரணம் என்ன என்றும் அதன் அடிவேர்களை அழிப்பதற்கான வழிமுறைகளையும் 'மண்ணகத்துப் பூந்துளிகள்' என்ற நாவலின் மூலம் உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணன் தனது படைப்புகள் மூலம் அனைத்து சமூகத்தின் சிக்கல்களையும், வெவ்வேறு களங்களுக்குச் சென்று அவர்களுடன் இணைந்து உழைக்கும் மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் எடுத்துரைக்கும் வகையில் தனது படைப்புகளை வெளிப்படுத்தியுள்ளார். தனிப்பட்ட சமூகத்தினை மட்டும் குறிப்பிடாமல் இடதுசாரி சிந்தனைக் கொண்டவராகவும், அனைத்து சமூக அவலங்களையும் பேசியவர். கள ஆய்வின் மூலம் பல சிக்கல்களைக் கடந்து உண்மைத்தன்மை கொண்ட படைப்புகளை வெளியிட்டவர். இவரின் படைப்புகள் சமூக உணர்வுகளும், உரிமைகளும் அடங்கிய ஒரு பெட்டகம் என்பதை இவ்வாய்வின் வழி அறிய முடிகிறது.

## References


கௌமாரீஸ்வரி. எஸ் (2025), இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள், சீதை பதிப்பகம், திருச்சி.

ராஜம் கிருஷ்ணன், (2025) உத்தரகாண்டம், பரிசல் வெளியீடு.

ராஜம் கிருஷ்ணன், (2023) கரிப்பு மணிகள், பரிசல் பதிப்பு.

சுசீலா, எம்.ஏ., (2026) இராஜம் கிருஷ்ணன்- தமிழ் இலக்கியப் பாதையில் பதிந்த அடிகள், சொல்வனம், இதழ் 359.

தோதாத்ரி, எஸ். (2014) இராஜம் கிருஷ்ணன், உங்கள் நூலகம்.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License